தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 97/ந/2024

நாள்.25.09 .2024

திரு.K.பாரூக் பாஷா,
கீழ்விஷாரம். இராணிப்பேட்டை மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
மேல்விஷாரம் நகராட்சி, மேல்விஷாரம் – எதிர்மனுதாரர்

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா, கீழ்விஷாரம், ஹக்கீம் அப்துல்லா சாகிப் தெரு, கதவு எண்.31 என்கிற முகவரியைச் சேர்ந்த திரு.K.பாரூக் பாஷா என்பவரின் 25.06.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில 27.06.2024 அன்று பெறப்பட்டு, 97/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா, கீழ்விஷாரம், ஹக்கீம் அப்துல்லா சாகிப் தெரு, கதவு எண்.31 என்கிற முகவரியைச் சேர்ந்த திரு.K.பாரூக் பாஷா என்பவர் தமது 25.06.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

“இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டம், விஷாரம் நகராட்சி, 6–வது வார்டில் பல வருடங்களாக நகராட்சியின் நிர்வாக குறைபாட்டால் பொதுமக்கள் பெரிதும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் மனு அளிக்கப்பட்டும் இன்றைய தேதி வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேற்கண்ட குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டிய 6–வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் திருமதி. இலட்சுமி அவர்கள் இன்றைய தேதிவரை அலட்சியப்போக்குடன் செயல்பட்டு வருகிறார். விஷாரம் நகராட்சி 6–வது வார்டில் எதிர்வரும் நாட்களில் பொதுமக்கள் வாழ தகுதியற்ற இடமாக மாறிவிடக்கூடும் என்ற

அச்சம் ஏற்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட குற்றச்சாட்டுக்கள் சம்மந்தமாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் விஷாரம் 6–வது வார்டு நகர மன்ற உறுப்பினர் திருமதி. இலட்சுமி அவர்கள் மீது தகுந்த சட்ட நடவடிக்கை மேற்கொண்டு குறைகளை சீர் செய்ய வழிவகை செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு குறித்து மேல்விஷாரம் நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவ 13.08.2024 நாளிட்ட அறிவிப்பின் மூலம் அறிக்கை கோரப்பட்டது.

மேல்விஷாரம் நகராட்சி ஆணையாளர் தனது 27.08.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்:

முறையீட்டு மனுதாரர் திரு. K.பாரூக் பாஷா தனது 25.06.2024 நாளிட்ட மனுவில் மேல்விஷாரம் நகராட்சியில் சுகாதார சீர்கேடுகள் மற்றும் சாலைகள், கால்வாய்கள், தெருவிளக்குகள் பராமரிப்பு தொடர்பாக புகார் தெரிவித்து சில புகைப்படங்களை இணைத்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களிடம் கோரியுள்ளார். முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள புகார்கள் அனைத்தும் அவரது 15.05.2023 தேதியிட்ட மாவட்ட ஆட்சித்தலைவரிடம் அளித்த மனுவிலும் தெரிவித்துள்ளார். அதனடிப்படையில் அப்புகார்கள் அனைத்தும் சரிசெய்யப்பட்டுவிட்டன.

மேலும் மேல்விஷாரம் நகராட்சி பகுதியில் 18 நிரந்தர தூய்மை பணியாளர்களும் மற்றும் தனியார் மூலம் 84 தூய்மை பணியாளர்களும் பணியமர்த்தப்பட்டு குப்பைகள் தரம் பிரித்து பெறப்பட்டு நகராட்சியில் இரண்டு இடங்களில் உள்ள நுண்ணுயிர் உர மையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு உரம் தயாரிக்கப்படுகிறது. மேலும் குப்பைகள் உடனுக்குடன் அப்புறப்படுத்துவதற்காக திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 5 எண்ணிக்கையிலான இலகுரக (LCV) வாகனங்கள் மற்றும் 16 எண்ணிக்கையிலான Battery operated vehicles பயன்படுத்தப்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட குடியிருப்பு பகுதியில் உள்ள குப்பைகள் அகற்றப்படுகின்றன. மேலும் கழிவுநீர் கால்வாய்கள், காணாறுகள், ஜேசிபி வாகனம் மூலம் தூர்வாரப்பட்டு அதனை தூய்மைபணியாளர்கள் மூலம் சுத்தம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் இந்நகராட்சி பகுதிகளில் பின்வரும் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. 2022-2023 மற்றும் 2023–24 ஆம் நிதியாண்டுகளில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம், நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம், கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் ஆகியவற்றின் கீழ் ரூ.555.55 இலட்சத்தில் இந்நகராட்சி பகுதிகளில் புதிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. 2022–23 மற்றும் 2023–24 ஆம் நிதியாண்டுகளில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம், மாநில நகர்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம், நமக்கு நாமே திட்டம் ஆகியவற்றின் கீழ் ரூ. 1.87.25 இலட்சம் செலவினத்தில் புதிய தெருவிளக்கு மின்கம்பங்கள் அமைத்து மின்விளக்கு (LED) பொருத்துதல், பழைய விளக்குகளை மாற்றம் செய்து புதியதாக LED விளக்குகள் பொருத்தும் பணிகள் ஆகியன மேற்கொள்ளப்பட்டு இந்நகராட்சி பகுதிகளில் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளன” என தெரிவித்துள்ளார்.

3. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான மேல்விஷாரம் நகராட்சி ஆணையர் ஆகியோரை 13.09.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவ 04.09.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரர் திரு.K.பாரூக் பாஷா 13.09.2024 ம் தேதிய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

“இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டம், மேல் விஷாரம் நகராட்சி 6–வது வார்டில் பல வருடங்களாக நகராட்சியின் நிர்வாக குறைபாட்டால் பொதுமக்கள் பெரிதும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் மனு அளிக்கப்பட்டும் இன்றைய தேதி வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டிய 6–வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் திருமதி. இலட்சுமி அவர்கள் இன்றைய தேதி வரை அலட்சியப்போக்குடன் செயல்பட்டு வருகிறார். விஷாரம் நகராட்சி 6–வது வார்டில் எதிர்வரும் நாட்களில் பொதுமக்கள் வாழ தகுதியற்ற இடமாக மாறிவிடக்கூடும் என்ற அச்சம் எங்களுக்கு ஏற்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட புகார் மீது விஷாரம் 6–வது வார்டு நகர மன்ற உறுப்பினர் திருமதி.லெட்சுமி அவர்கள் மீது தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கும்படியும், எனது 25.06.2024 நாளிட்ட புகார் மனுவில் தெரிவித்துள்ள விவரங்களை மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படியும் இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்.

இன்று 13.09.2024 இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி கீழ்க்கண்ட எனது கோரிக்கைகளை சமர்ப்பிக்கிறேன்:

1) இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டம், விஷாரம் நகராட்சி 6–வது வார்டில் பல வருடங்களாக நகராட்சியின் நிர்வாக குறைபாட்டால் பொதுமக்கள் பெரிதும் மன உளைச்சலுக்கு ஆளாகி உள்ளது தொடர்பாக அரசு அதிகாரிகளிடம் மனு அளிக்கப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. விரைந்து நடவடிக்கை எடுக்க கோருகிறேன்.

2) 6–வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் திருமதி .இலட்சுமி அவர்கள் அலட்சியப்போக்குடன் செயல்பட்டு வருவதனால் வரும் காலங்களில் 6–வது வார்டில் பொதுமக்கள் வாழ தகுதியற்ற இடமாக மாறி விடக்கூடும் என்ற அச்சத்தினை போக்குவதற்கு உரிய நடவடிக்கையினை கோருகிறேன்” என தெரிவித்துள்ளார்.

5) மேல்விஷாரம் நகராட்சி ஆணையாளர் தனது 13.09.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

1) மேல்விஷாரம் நகராட்சி பகுதிகளில் 18 நிரந்தர தூய்மை பணியாளர்களும் மற்றும் தனியார் மூலம் 84 தூய்மை பணியாளர்களும் பணியமர்த்தப்பட்டு குப்பைகள் தரம் பிரித்து பெறப்பட்டு நகராட்சியில் இரண்டு இடங்களில் உள்ள நுண்ணுயிர் உர மையத்திற்கு கொண்டு

செல்லப்பட்டு உரம் தயாரிக்கப்படுகிறது. குப்பைகளை உடனுக்குடன் அப்புறப்படுத்துவதற்காக திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 5 எண்ணிக்கையிலான இலகுரக (LCV) வாகனங்கள் மற்றும் 16 எண்ணிக்கையிலான Battery operated vehicles பயன்படுத்தப்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட குடியிருப்பு பகுதியில் குப்பைகள் அகற்றப்படுகின்றன. கழிவுநீர் கால்வாய்கள், காணாறுகள் ஜேசிபி வாகனம் மூலம் தூர் வாரப்பட்டு தூய்மைப்பணியாளர்கள் மூலம் சுத்தம் செய்யப்பட்டு வருகிறது.

2) 2022–23 மற்றும் 2023–24 நிதியாண்டுகளில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம், நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம், கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் ஆகியவற்றின் கீழ் ரூ.555.55 இலட்சத்தில் இந்நகராட்சி பகுதிகளில் புதிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

3) 2022–23 மற்றும் 2023–24 நிதியாண்டுகளில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம், மாநில நகர்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம், நமக்கு நாமே திட்டம் ஆகியவற்றின் கீழ் ரூ.187.25 இலட்சம் செலவினத்தில் புதிய தெருவிளக்கு மின்கம்பங்கள் அமைத்து மின்விளக்கு(LED) பொருத்துதல், பழைய விளக்குகளை மாற்றம் செய்து புதியதாக LED விளக்குகள் பொருத்தும் பணிகள் ஆகியன மேற்கொள்ளப்பட்டு இந்நகராட்சி பகுதிகளில் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளன.

மனுதாரர் 15.05.2023 அன்று இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவரிடம் மனு அளித்ததை தொடர்ந்து அவரது புகார் மனுவில் தெரிவித்துள்ளவாறு கால்வாய் தூர் வாருதல், பெருமழையின்போது உடைந்த கால்வாயின் பக்கச்சுவற்றை மீண்டும் கட்டுதல், தூய்மைப்பணி போன்ற பராமரிப்பு பணிகள்(Maintenance work) அனைத்தும் சரி செய்யப்பட்டு விட்டன என்றும், சரிசெய்யப்படாத சொத்து உருவாக்கும் வகையிலான (Asset creating work) சிமெண்ட் சாலை அமைத்தல், கால்வாயை மீண்டும் கட்டுதல் போன்ற பணிகளையும் நிதி நிலைக்கேற்ப விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் தன் 27.08.2024 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ள விவரங்களை மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படியும் இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்வதாக தெரிவித்துள்ளார்.

6) 6–வது வார்டு நகர மன்ற உறுப்பினர் திருமதி. இலட்சுமி 13.09.2024 அன்றைய நேரடி விசாரணயில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமப்பித்துள்ளார்.

என்னுடைய வார்டு எண்.06–க்கு உட்பட்ட பகுதியான நவாப்சி அப்துல் அக்கீம் தெரு, நவாப் அப்துல் அக்கீம் சந்து தெரு மற்றும் சி அப்துல் அக்கீம் சாயுபு தெரு ஆகிய தெருக்களின் சாலைகள் மிகவும் பழுதாகி மோசமாக உள்ளதால் 21.08.2019 அன்று மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு மனு கொடுத்தேன். நிதிபற்றாக்குறையால் பின்பு சாலை அமைத்து தருவதாக மேல்விஷாரம் ஆணையாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோர் கூறினார்கள்.

03.07.2023 அன்று உயர்திரு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், உயர்திரு தமிழ்நாடு நகராட்சி அமைச்சர் அவர்களுக்கும், உயர்திரு மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், மேல்விஷாரம் நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கும் நகர்மன்ற தலைவர் திரு S.T.அமீன் அவர்களுக்கும் சாலை அமைத்து தர வேண்டி மனு அளித்தேன். இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

11.12.2023 அன்று மீண்டும் மாவட்ட ஆட்சியர், நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு சாலை அமைத்து தருமாறு மனு அளித்தேன். 12.08.2024 அன்று கூட நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு மனு அளித்துள்ளேன். இவை அனைத்திற்கும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதுகுறித்து நகர்மன்ற கூட்டத்தில் கேட்டாலும் நிதி பற்றாக்குறை உள்ளது என கூறுகிறார்கள்.

எனவே எங்கள் பகுதி மக்களுக்கு நன்மை ஏற்படும் வகையில் எங்கள் பகுதிக்கு உடனடியாக சாலை அமைத்து தருவதற்கு சம்மந்தப்பட்ட துறைகளுக்கு பரிந்துரை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் அவரது வாக்குமூலம், மேல்விஷாரம் நகராட்சி ஆணையரின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள், மற்றும் 6–வது வார்டு நகர மன்ற உறுப்பினர் திருமதி. இலட்சுமி அவர்களின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் தனது புகார் மனுவில் இராணிப்பேட்டை மாவட்டம் வாலஜா வட்டம், விஷாரம் நகராட்சி 6–வது வார்டில் பல வருடங்களாக நகராட்சியின் நிர்வாக குறைபாட்டால் பொதுமக்கள் பெரிதும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளார்கள் என்றும் இது தொடர்பாக மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் மேற்கண்ட குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டி 6–வது வார்டு நகர் மன்ற உறுப்பினரிடம் மனு கொடுத்தும் இன்றைய தேதி வரை நடவடிக்கை இல்லை எனவும் எனவே 6–வது வார்டு மன்ற உறுப்பினர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

மேல்விஷாரம் நகராட்சி பகுதிகளில் 18 நிரந்தர தூய்மை பணியாளர்களும் மற்றும் தனியார்மயம் மூலம் 84 தூய்மை பணியாளர்களும் பணியமர்த்தப்பட்டு குப்பைகள் தரம் பிரித்து பெறப்பட்டு நகராட்சியில் இரண்டு இடங்களில் உள்ள நுண்ணுயிர் உரமையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு உரம் தயாரிக்கப்படுகிறது என்பதும், குப்பைகள் உடனுக்குடன் அப்புறப்படுத்துவதற்காக திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 5 எண்ணிக்கையிலான இலகுரக (LCV) வாகனங்கள் மற்றும் 16 எண்ணிக்கையிலான Battery operated vehicles பயன்படுத்தப்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட குடியிருப்பு பகுதியில் குப்பைகள் அகற்றப்படுகின்றன என்பதும், கழிவுநீர் கால்வாய்கள், காணாறுகள் ஜேசிபி வாகனம் மூலம் தூர் வாரப்பட்டு அதனை தூய்மைப்பணியாளர்கள் மூலம் சுத்தம் செய்யப்பட்டு வருகிறது என்பதையும் மேல்விஷாரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தின் மூலம் அறியமுடிகிறது.

மேலும் 2022–23 மற்றும் 2023–24 நிதியாண்டுகளில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம், நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம், கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் ஆகியவற்றின் கீழ் ரூ.555.55 இலட்சத்தில் இந்நகராட்சி பகுதிகளில் புதிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன என்பதையும் நகராட்சி ஆணையரின் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது.

2022–23 மற்றும் 2023–24 நிதியாண்டுகளில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம், மாநில நகர்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம், நமக்கு நாமே திட்டம் ஆகியவற்றின் கீழ் ரூ.187.25 இலட்சம் செலவினத்தில் புதிய தெருவிளக்கு மின்கம்பங்கள் அமைத்து மின்விளக்கு(LED) பொருத்துதல், பழைய விளக்குகளை மாற்றம் செய்து புதியதாக LED விளக்குகள் பொருத்தும் பணிகள் ஆகியன மேற்கொள்ளப்பட்டு மேல்விஷாரம் நகராட்சி பகுதிகளில் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளன என்பதும் அறிய முடிகிறது.

தன்னுடைய வார்டு எண்.06–க்கு உட்பட்ட பகுதியான நவாப்சி அப்துல் அக்கீம் தெரு, நவாப் அப்துல் அக்கீம் சந்து தெரு மற்றும் சி அப்துல் அக்கீம் சாயுபு தெரு ஆகிய தெருக்களின் சாலைகள் மிகவும் பழுதாகி மோசமாக உள்ளதால் 21.08.2019 அன்று மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு 6–வது நகர மன்ற உறுப்பினர் மனு கொடுத்தும், நிதிபற்றாக்குறையால் பின்பு சாலை அமைத்து தருவதாக மேல்விஷாரம் ஆணையாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோர் கூறியதாக 6–வது வார்டு நகர மன்ற உறுப்பினர் தெரிவித்திருப்பதும், மேலும் 03.07.2023 அன்று உயர்திரு மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், மேல்விஷாரம் நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கும் மற்றும் நகர்மன்ற தலைவர் திரு S.T.அமீன் அவர்களுக்கும் சாலை அமைத்து தர வேண்டி மனு அளித்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கூறி 11.12.2023 அன்று மீண்டும் மாவட்ட ஆட்சியர், நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு சாலை அமைத்து தருமாறு மனு கொடுத்தும், 12.08.2024 அன்று கூட நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு மனு அளித்தும் இவை அனைத்திற்கும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரிவித்து இதுகுறித்து நகர்மன்ற கூட்டத்தில் கேட்டாலும் நிதி பற்றாக்குறை உள்ளது என கூறுகிறார்கள் என ஒரு மக்கள் பிரதிநிதி கூறுவதை இம்முறைமன்ற நடுவம் கவனத்தில் கொள்கிறது.

மனுதாரரின் புகார் மனுவில் தெரிவித்துள்ளவாறு கால்வாய் தூர் வாருதல், பெருமழையின்போது உடைந்த கால்வாயின் பக்கச்சுவற்றை மீண்டும் கட்டுதல், தூய்மைப்பணி போன்ற பராமரிப்பு பணிகள் (Maintenance work) அனைத்தும் சரி செய்யப்பட்டு விட்டன என்றும், சரிசெய்யப்படாத சொத்து உருவாக்கும் வகையிலான (Asset creating work) சிமெண்ட் சாலை அமைத்தல், கால்வாயை மீண்டும் கட்டுதல் போன்ற பணிகளையும் நிதிநிலைக்கேற்ப விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மேல்விஷாரம் நகராட்சி ஆணையாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு , அரசிடமிருந்து நிதியினை பெற உரிய நடவடிக்கை எடுத்து விரைவில் நிலுவைப்பணிகளை முடித்திடுமாறு மேல்விஷாரம் நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

இந்நேர்வில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரத்தை இவ்வாணை பெறப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு அறிக்கையாக சமர்ப்பிக்குமாறு மேல்விஷாரம் நகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

மேலும் இனி வருங்காலங்களில் பொதுமக்களிடமிருந்து புகார் மனு பெற்றபின்னர்தான் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நிலைமையினை மாற்றி அவ்வப்போது பெறப்படும் புகார்மனுக்கள் மீது தமிழக அரசு வழிகாட்டுதல்கள், நெறிமுறைகளின்படி விரைந்து நடவடிக்கை எடுக்க மேல்விஷாரம் நகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

2024ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 25–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு.K.பாரூக் பாஷா,
31, ஹக்கீம் அப்துல்லா சாஹிப் தெரு,
கீழ் விஷாரம் – 632 509.
வாலாஜா வட்டம்.
இராணிப்பேட்டை மாவட்டம்.

2)நகராட்சி ஆணையர்,
மேல்விஷாரம் நகராட்சி,
மேல்விஷாரம்.
இராணிப்பேட்டை மாவட்டம்.

3)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4)ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

30/9/24

சட்ட ஆலோசகர்/செயலாளர்(முகூபொ)